செ.வெ.எண்:24 நாள்:12.11.2021

**தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்,ICAR வேளாண்மை அறிவியல் மையத்தில் வேளாண் பயிற்றுனர்களுக்கு 08.11.2021 முதல் 12.11.2021 வரை 5 நாட்கள் மா, கொய்யா, எலுமிச்சை சாகுபடி மற்றும் அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பங்கள் குறித்த மாநில அளவிலான பயிற்சியில் கலந்துக்கொண்ட 35 விவசாயிகளுக்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் சான்றிதழ் மற்றும் கையேடுகளை இன்று(12.11.2021) வழங்கினார்.**

**இந்த பயிற்சியில் கலந்துக்கொண்ட கிருஷ்ணகிரி, வேலூர், மதுரை, விருதுநகர் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த 35 விவசாயிகளும் வேளாண் விஞ்ஞானிகள் வழங்கிய அறிவுரைகளை தங்கள் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு நல்ல முறையில் கற்றுக்கொடுக்க வேண்டும் என்றும், இன்றயை காலநிலைக்கு ஏற்ப விவசாயம் செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் வேண்டுகோள்.**

கிருஷ்ணகிரி மாவட்டம், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் மற்றும் ICAR வேளாண்மை அறிவியல் மையம் மூலம் கிருஷ்ணகிரி, வேலூர், மதுரை, விருதுநகர் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து 35 நபர்கள் சமுதாயப் பண்ணைப் பள்ளியின் முதன்மை பயிற்றுநர்களுக்கு 08.11.2021 முதல் 12.11.2021 வரை மா, கொய்யா, எலுமிச்சை சாகுபடி மற்றும் அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப அவர்கள் சான்றிதழ்கள் மற்றும் கையேடுகளை வழங்கினார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப அவர்கள் பேசியதாவது:**

தமிழக அரசு உலக வங்கி நிதியதவியுடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம், ஊரக தொழில்களை மேம்படுத்துதல், வேலைவாய்ப்பு மற்றும் நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல், வருமானத்தை பெருக்குதல் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்போது இத்திட்டத்தில் பிறத்துறைகள் மூலம் துவங்கப்பட்ட உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் மூலம் புதியதாக துவங்கப்படவுள்ள உழவர் உற்பத்தியாளர் குழுக்களில் உள்ள விவசாயிகளுக்கு சமுதாயப் பண்ணை பள்ளியின் மூலம் பயிற்றுநர்களுக்கான பயிற்சி முடித்தவர்களைக் கொண்டு, மண், தட்பவெப்பநிலை, விதைதேர்வு செய்தல், நீர் நிர்வாகம், ஒருங்கிணைந்த பண்ணையம், நோய் கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி சமுதாயப் பண்ணைபள்ளியில் பயிற்சி வழங்குவதன் மூலம் விவசாயிகளின் வேளாண் இடுபொருட்களுக்கான செலவினங்கள் குறையும், உற்பத்தியை பெருக்கமுடியும், மேலும் இந்த பயிற்சியில் கலந்துக்கொண்ட 35 விவசாயிகளும் தங்கள் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு வேளாண் விஞ்ஞானிகள் வழங்கிய அறிவுரைகளை நல்ல முறையில் கற்றுக்கொடுக்க வேண்டும் என்றும், இன்றயை காலநிலைக்கு ஏற்ப விவசாயம் செய்ய வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்ட கிருஷ்ணகிரி மாவட்ட செயல் அலுவலர் திரு.சு.தமிழ்மாறன் அவர்கள் திட்ட விளக்கவுரை வழங்கினார். டாக்டர்.T.சுந்தர்ராஜ் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர், வேளாண்மை அறிவியல் மையம் கிருஷ்ணகிரி, முனைவர் ஆர்.செந்தில் குமார் இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய முதன்மை விஞ்ஞானி, முன்னிலை வகித்தார். நிகழ்ச்சி முன்னதாக செயல் அலுவலர் திரு.எஸ்.சிவக்குமார் அவர்கள் வரவேற்புரையும், திரு.T.ரமேஷ்பாபு தொழில்நுட்ப வல்லுநர் தோட்டக்கலை கிருஷ்ணகிரி, தமிழ்நாடு ஊரகப்புத்தாக்க திட்ட செயல் அலுவலர்கள் திரு.வெ.த.பிரதீப்குமார், திரு.ஆ.இராஜசேகரன், திரு.எம்.ஆனந்த், நிகழ்ச்சி முடிவில் திரு.எஸ்.செந்தில்குமார், தொழில்நுட்ப வல்லுநர் வேளாண் விரிவாக்கம் கிருஷ்ணகிரி அவர்கள் நன்றி கூறினார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**